**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.116/2014**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி பி. கௌசல்யா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சி 2 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2021 ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் . | குப்புசாமி | மதம் . |
| த/பெ . | பெத்த முனிசாமி | ஜாதி . |
| வயது . | 69 | கிராமம் . |
| தொழில் | | வட்டம் . |

**நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்பி வாதி தரப்பு 2வது சாட்சியாக சாட்சி சொல்கிறேன். வாதி தரப்பு 2வது சாட்சியின் முதல் விசாரணை**

நான் நீதிமன்றத்திற்கு அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சி சொல்ல வந்தேன். நான் மாம்பாக்கம் கிராம்த்திலிருந்து வருகிறேன். கோவிந்தசாமியை தெரியும் அவரது மனைவி, வாரிசுகளையும் தெரியும். பிரதிவாதிகளை தெரியும். 1ம் வாதி உயிருடன் இல்லை. 1ம் வாதியின் மனைவியும் ராஜம்மாள் அவருக்கு முன் இறந்து விட்டார். ராஜம்மாள் சின்னம்மா நாயுடு மகன் கிருஷ்ணடு என்பவரிடமிருந்து வழக்கு சொத்தை 1990ல் கிரையம் வாங்கினார். அந்த கிரைய ஆவணத்தில் நான் 1வது சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன். வா.த.சா.ஆ.1ல் என்னுடைய கையெழுத்து தான் உள்ளது. வழக்கு சொத்தை சுமார் 21 வருடத்திற்கு முன் வாங்கினார். வழக்கு சொத்தை விற்ற கிருஷ்ணடு கிரையம் கொடுத்த போது ஆரோக்கியமாக தான் இருந்தார். வழக்கு சொத்தை திருத்தணி சார் பதிவாளர் அலுவலர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது கிருஷ்ணடு இருந்தார் நான் சாட்சி கையெழுத்து போட்டார். வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் 60/1. வழக்கு சக்குபந்தி கிழக்கு சிட்டி பாபு, கோவிந்தன் வீடு, மேற்கு கிருஷ்ணடு கூரை வீடு வாங்கும் போது இருந்தது, தற்போது வீடு இடித்து விட்டது , வடக்கு பெரிய தெரு, தெற்கு கிருஷ்ணடு தோட்டகால் உள்ளது. வழக்கு சொத்தை

கிரையம் வாங்கிய ராஜம்மாள் தான் அனுபவித்து வந்தார். அவர் இறந்த பிறகு அவரது வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள். ராஜம்மாள் இறந்து 2வருடம் மேல் ஆகிறது. ராஜம்மாளுக்கு 2 மகள், 2 மகன் 2 முதல் 5 வாதிகள் தான் சட்டபடியான வாரிகள் வழக்கு சொத்தை அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள். கிருஷ்ணடு 1ம் பிரதிவாதி கிரையம் 1990 கொடுப்பதற்கு முன்பே ஊரை போய்விட்டார் என்பது பொய் ஒரு வருடம் கழித்து 1991ல் அவருடைய அக்கா மகன் ஸ்ரீராமலூக்கு 4 ஏக்கர் நிலம் எழுதி கொடுத்தார். பெரியப்பா மகன் கோவிந்தனுக்கு வீட்டு மனை எழுதி கொடுத்தார். வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதியின் தம்பி கிருஷ்ணடு கிரையம் கொடுக்கவில்லை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வரவில்லை என்று சொல்வது பொய். கிருஷ்ணடு 1ம் வாதி ராஜம்மாளுக்கு தான் வழக்கு சொத்து சொந்தம் சட்டப்படி உரிமையாளர் கிருஷ்ணடு வாரிசுகளுக்கு உரிமை இல்லை. வாதி தாக்கல் செய்த வழக்கு சரியானது. வாதி பிரதிவாதிகளுக்கு எனக்கு முன் விரோதம் இல்லை நான் சொல்வது உண்மை.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**